**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**04 செப்டம்பர் 2015 / 20 துல்கஃதா 1436**

# திருக்குர்ஆனை வழிகாட்டியாக அமைத்துக் கொள்ள வேண்டும் - அல்-கஹ்ஃபி எனும் அத்தியாயத்தில் பெற வேண்டிய பாடம்

اَلْحَمْدُ للهِ الَّذِي أَحَاطَ بِكُلِّ شَيْءٍ عِلْمًا وَقَضَى بِمَا يُرِيْدُ حِكْمَةً
وَ حُكْمًا، أَنْعَمَ بِالنِّعَمِ ابْتِلاَءً وَامْتِحَانًا، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ ذُوْ الْجَلاَلِ وَالإِكْرَامِ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا
مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ أَفْضَلُ الأَنَامِ وَ مِصْبَاحُ الظَّلاَمِ، اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا
كَثِيْرًا .أَمَّا بَعْدُ فَيَا أَيُّهَا النَّاسُ اتَّقُوْا اللهَ حَيْثُ مَا كُنْتُمْ، فَإِنَّ اللهَ
يَعْلَمُ سِرَّكُمْ وَ عَلاَنِيَّتَكُمْ

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

கடந்த பல வாரங்களின் ஜும்ஆ பிரசங்கங்களில், சன்மார்க்கத்தைப் பற்றி உண்மையான, சரியான கல்வியறிவைப் பெறுவது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அவசியமாகும் என்பதை வலியுறுத்தப்பட்டன. அவ்வாறு செய்வதன் மூலம் நமது ”தக்வா” எனும் இறை பக்தி மேற்கொண்டு பிரகாசித்து, உறுதியாகும். அதுமட்டுமல்ல, அதன் மூலம் அல்லாஹ்

சுப்ஹானஹு வதஆலாவின் கட்டளைகளுக்கு நாம் தொடர்ந்து கட்டுப்பட்டு நடப்பதற்கும், அவன் நமக்குத் தடை செய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கும் நமக்கு ஆர்வம் ஏற்படும்.

ஜமாஅத்தார்களே!

இவ்விஷயத்தில் நாம் செய்ய வேண்டிய முதல் முயற்சி திருக்குர்ஆனில் காணப்படும் போதனைகளை சரியாக அறிவதாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”அல்-கஹ்ஃபி” எனும் அத்தியாயத்தின் 1-2 வரையிலான வசனங்களில் கூறுகின்றான்:

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِىٓ أَنزَلَ عَلَىٰ عَبْدِهِ ٱلْكِتَـٰبَ وَلَمْ يَجْعَل لَّهُۥ عِوَجَا ۜ ﴿١﴾
قَيِّمًا لِّيُنذِرَ بَأْسًا شَدِيدًا مِّن لَّدُنْهُ وَيُبَشِّرَ ٱلْمُؤْمِنِينَ ٱلَّذِينَ
يَعْمَلُونَ ٱلصَّـٰلِحَـٰتِ أَنَّ لَهُمْ أَجْرًا حَسَنًا ﴿٢﴾

பொருள்: புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே! அவனே தன்னுடைய அடியார் மீது இந்த வேதத்தை இறக்கியருளினான். இதில் எவ்விதக் கோணலையும் வைத்திடவில்லை. இது முற்றிலும் சரியான விஷயத்தைக் கூறுகின்ற வேதமாகும். அல்லாஹ்வின் கடுமையான வேதனையைக் குறித்து (மக்களை) அவர் எச்சரிப்பதற்காகவும், ”இறைநம்பிக்கை கொண்டு நற்செயல் புரிவோர்க்குத் திண்ணமாக நற்கூலி

இருக்கின்றது" என சுபச் செய்தி சொல்வதற்காகவும் (இவ்வேதம் இறக்கியருளப்பட்டுள்ளது).

ஜமாஅத்தார்களே!

திருக்குர்ஆன் அகிலத்தார் அனைவருக்கும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து அருளப்பட்ட மிகச் சிறந்த அருட்கொடையாக உள்ளது. அதன் மூலம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு நேர்வழி காட்டுகின்றான். இறை நம்பிக்கையாளர்களுக்கு சுபச் செய்தியையும், எச்சரிக்கையையும் அதன் மூலம் தெரிவிக்கின்றான். வெள்ளிக்கிழமைகள் நெருங்கும் போதெல்லாம் திருக்குர்ஆனின் ஒரு குறிப்பிட்ட அத்தியாயத்தை ஓதுவது இறைத்தூதர்(ஸல்) அவர்களின் "சுன்னத்" (வழிமுறை) எனவும், அந்த சுன்னத்தைப் பற்றிப் பிடிக்க வேண்டுமெனவும் நாம் நினைவூட்டப் படுகிறோம். ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

யார் வெள்ளிக்கிழமையன்று திருக்குர்ஆனின் "அல்-கஹ்ஃபி" எனும் அத்தியாயத்தை ஓதி வருகிறாரோ அவருக்கு அல்லாஹ் இரண்டு வெள்ளிக்கிழமைகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பிரகாசத்தை வழங்குகிறான். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் அல்-ஹாகிம் ரஹ், இமாம் அல்-பைஹகீ ரஹ்)

எனவே, திருக்குர்ஆனின் 18-வது அத்தியாயமாகிய "அல்-கஹ்ஃபி" என்பதை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஓத முயற்சிக்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். அதே சமயம், அந்த அத்தியாயத்தின் பொருளையும், அதில் காணப்படும் பாடங்களையும்,

வரலாறுகளையும் நாம் அறிந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும். சிலர் திருக்குர்ஆனை ஓதுகிறார்கள்; ஆனால் அவர்களின் ஓதுதல் அவர்களின் தொண்டைக்குக் கீழே செல்வதில்லை. திருக்குர்ஆனின் வசனங்களின் பொருள்கள் அவர்களின் உள்ளங்களைத் தொட்டு, ஆன்மாக்களை ஆசைப்பதில்லை.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் "அக்லாக்" (ஒழுக்க மாண்புகளை) ப்பற்றி அவர்களின் மனைவியாகிய செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்ட போது: "நிச்சயமாக, இறைத்தூதர்(ஸல்) அவர்களின் ஒழுக்க மாண்புகள் திருக்குர்ஆனாகவே இருந்தது. (அதாவது திருக்குர்ஆனில் காணப்படும் அதே ஒழுக்க மாண்புகள் தான் அவர்களிடம் காணப்பட்டன)" என ஆயிஷா (ரலி) பதில் கூறினார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

மேற்கண்ட ஹதீதின் பொருள், இறைத்தூதர்(ஸல்) அவர்கள் திருக்குர்ஆனை ஆய்வு செய்தார்கள்; அதன் போதனைகளின் பிரகாரம் நடந்தார்கள்; திருக்குர்ஆன் தடை செய்யும் அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்திருந்தார்கள் என்பதாகும். எனவே, திருக்குர்ஆனுடனான நமது தொடர்பும் அவ்வாறு தான் இருக்க வேண்டும்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

நாம் இறுதியாக எப்போது திருக்குர்ஆனைப் பார்த்தோம்? நம்மிடம் திருக்குர்ஆன் பிரதி உள்ளதா? அல்லது அன்றாடம் சில நிமிடங்கள் திருக்குர்ஆனைப் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் வாய்ப்பைத் தரும் கைத் தொலைபேசி போன்றவற்றில் திருக்குர்ஆன் வசனங்களைப் பதிவிறக்கம் செய்து வைத்துள்ளோமா? எனச் சிந்திக்க வேண்டும். சிலவேளை, நம்மில் சிலர், இஸ்லாத்தைப் பரப்பி அதனை பிரகாசமாக்க வேண்டும்; இஸ்லாத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றெல்லாம் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் இன்னும் திருக்குர்ஆனை தமது நண்பனாக ஆக்கிக் கொள்ளவில்லை. அவர்களின் உள்ளங்கள் திருக்குர்ஆனுடன் நெருக்கமாக இல்லை. இதை விடக் கவலைக்குரிய விஷயம் யாதெனில், நம்மில் சிலர், தாம் பயபக்தியாளர்கள் எனக் காட்டிக் கொள்வதற்காக திருக்குர்ஆன் வசனங்களின் சிலவற்றை நகல் எடுத்து ஃபேஸ்புக், டுவிட்டர் அல்லது Instagram போன்றவற்றில் அனுப்புகிறார்கள்; ஆனால் அவ்வசனங்களின் பிரகாரம் அவர்கள் நடக்கவில்லை என்பது மட்டுமல்ல, அவற்றின் பொருள்களைக் கூட அவர்கள் அறிய முயற்சிப்பதில்லை. எவரிடமாவது இவ்விதமான நிலை காணப்படுமானால் அவர்கள் திருக்குர்ஆன் விஷயத்தில் தமது நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும். காரணம், இவ்விதமான நிலை தொடர்ந்தால் திருக்குர்ஆனுடனான நமது உறவை அது மேற்கொண்டு தூரமாக்கி விடும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகின்றான்:

وَقَالَ ٱلرَّسُولُ يَٰرَبِّ إِنَّ قَوۡمِي ٱتَّخَذُواْ هَٰذَا ٱلۡقُرۡءَانَ مَهۡجُورٗا ٣٠

பொருள்: மேலும், இறைத்தூதர் கூறுவார்: “என் இறைவா! என் சமூகத்தைச் சார்ந்த மக்கள் இந்தக் குர்ஆனை நகைப்புக்குரியதாக்கி விட்டார்கள்.” (அல்-குர்ஆன்: அத்தியாயம்: அல்-ஃபுர்கான், வசனம்: 30)

மேற்கண்ட வசனத்தில் காணப்படும் ”மஹ்ஜூரா” (கைவிடப்பட்டது) என்ற வார்த்தைக்குப் பல பொருள்கள் உள்ளன; அவற்றில் ஒன்று, ”திருக்குர்ஆன் வசனங்களின் பொருள்களை அறிய முயற்சிக்காமலிருப்பதாகும்” என இமாம் இப்னு கஸீர் (ரஹ்) தெரிவித்துள்ளார்கள்.

திருக்குர்ஆனின் பொருளை அறிந்து கொள்ள முயற்சிக்காமலிருப்பது நமது மிகப் பெரிய விரோதியாகிய ஷைத்தானின் (அவன் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டுமாக!) பழக்கமாகும். “அல்-கஹ்ஃபி” எனும் அத்தியாயத்தின் 50-வது வசனத்தில் அல்லாஹ் ”இப்லீஸ்” உடைய வரலாற்றை நமக்கு நினைவூட்டுகிறான். உண்மை எது என்பதை ”இப்லீஸ்” அறிந்திருந்தும் அதனைப் புறக்கணித்து அதிலிருந்து திரும்பவே அவன் விரும்புகிறான். அவனது அகந்தை மற்றும் கர்வத்தின் காரணமாக அல்லாஹ்வின் கட்டளையை அவன் புறக்கணித்தான். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகின்றான்:

وَإِذْ قُلْنَا لِلْمَلَٰٓئِكَةِ ٱسْجُدُوا۟ لِءَادَمَ فَسَجَدُوٓا۟ إِلَّآ إِبْلِيسَ كَانَ مِنَ ٱلْجِنِّ
فَفَسَقَ عَنْ أَمْرِ رَبِّهِۦٓ ۗ أَفَتَتَّخِذُونَهُۥ وَذُرِّيَّتَهُۥٓ أَوْلِيَآءَ مِن دُونِى وَهُمْ
لَكُمْ عَدُوٌّۢ ۚ بِئْسَ لِلظَّٰلِمِينَ بَدَلًا ﴿٥٠﴾

பொருள்: நாம் வானவர்களிடம் ‘ஆதத்திற்குச் சிரம் பணியுங்கள்’ என்று கூறியதை நினைவுகூருங்கள். அவர்கள் அனைவரும் சிரம் பணிந்தார்கள். ஆனால், இப்லீஸ் சிரம் பணியவில்லை. அவன் ஜின்களைச் சார்ந்தவனாக இருந்தான். ஆகையால், அவன் தன் அதிபதியின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தான். (இப்போது) என்னை விடுத்து நீங்கள் அவனையும், அவனுடைய சந்ததிகளையும் உங்களுடைய பாதுகாவலர்களாய் ஆக்கிக் கொள்கிறீர்களா, என்ன? அவர்களோ உங்களின் பகைவர்களாவர். மோசமான மாற்றை இந்தக் கொடுமையாளர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். (அல்-குர்ஆன்: 18: 50)

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

நாம் எப்போதும் நமது கண்ணுக்குத் தெரிகின்ற எதிரிகளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். அவர்களைத் தோற்கடிப்பதிலேயே கவனத்தைச் செலுத்துகின்றோம். ஆனால் நாம் தெளிவாக அறிந்துள்ள நமது விரோதியாகிய ஷைத்தானை மறந்து விடுகிறோம். ”நமது நரம்புகளில் இரத்தம் ஓடுவது போன்று ஷைத்தான் நமது உடல்களில் ஓடுகிறான்; நமது உடல்கள் மற்றும் உள்ளங்களில் அவன் ஆதிக்கம் செலுத்துகிறான்” என ஹதீதில் விவரிக்கப்பட்டுள்ளது. ஆசையைத் தூண்டுகின்ற ஷைத்தானின் கிசுகிசுப்பு, தவறுகளை அவன் நியாயப்படுத்துதல், அவனது தூண்டுதல்கள் போன்றவற்றைப் பற்றி நமது பிள்ளைகளுக்கு அடிக்க நாம் நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். நாம் எப்போதும் நமது பிள்ளைகளுடன் இருந்து, அவர்களை ஒவ்வொரு நொடிப் பொழுதும் கவனித்துக் கொண்டிருக்க முடியாது. எனவே

ஷைத்தானின் ஆதிக்கத்தைத் தடுக்கின்ற எதிர்ப்பு சக்தியை நாம் நம்மிலும் நமது பிள்ளைகளிடமும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எப்போதெல்லாம் கெட்ட காரியத்தை, பாவத்தைச் செய்ய வேண்டுமென்ற உணர்வு ஏற்படுகிறதோ உடனே அல்லாஹ்வை நினைவில் கொள்ள வேண்டும் எனவும், அந்த சூழ்நிலையிலிருந்து விலகி, அதை விடச் சிறந்த சூழ்நிலைக்கு மாறி விட வேண்டும் எனவும் நமது பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். ”திக்ரு” (இறை தியாணம்) செய்யும் பழக்கத்தை பிள்ளைகளிடம் ஏற்படுத்துங்கள்; அப்போது தான் அவர்களின் உள்ளங்கள் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் பாதுகாக்கப்படும்.

ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

எவரொருவர் : ”லாயிலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு, லா ஷரீக லஹு, லகுல் முல்கு, வலஹுல் ஹம்து, வகுவ அலா குல்லி ஷையின் கதீர்” (வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணையாக யாருமில்லை; அனைத்து புகளும் ஆட்சி அதிகாரமும் அவனுக்கே சொந்தமானது; அவன் அனைத்து வஸ்த்துக்கள் மீதும் சக்தி பெற்றவனாக இருக்கின்றான்.) என ஒரு நாளில் 100 தடவை ஓதுகிறாரோ, அவர் பத்து அடிமைகளை உரிமை விட்ட நன்மைகளைப் பெறுகிறார். நூறு நற்காரியங்களைச் செய்த நன்மைகள் அவருக்குப் பதிவு செய்யப்படுகின்றன. அவரது நூறு தீய செயல்கள் மன்னிக்கப்படுகின்றன. அந்த நாளின் பிற்பகல் வரை அவர் ஷைத்தானின் தவறான தூண்டுதல்களை விட்டும் பாதுகாக்கப்படுகின்றார். (ஹதீது நூல்கள்: புகாரி & முஸ்லிம்)

திருக்குர்ஆனை நாம் ஆழமாகப் புரிந்து கொள்வதன் மூலம் நமது உள்ளங்களை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா பிரகாசிக்கச்

செய்வானாக! நமது அனைத்து செயல்களும் திருக்குர்ஆனின் வெளிச்சத்தால் வழிகாட்டப்படட்டுமாக! திருக்குர்ஆனுக்கு நாம் நெருக்கமாக இருந்தால், திருக்குர்ஆனில் காணப்படும் போதனைகளை நாம் செயல்படுத்தினால், அல்லாஹ் நம்மையும் நமது குடும்பத்தார்களையும் இம்மையிலும் மறுமையிலும் ஆபத்துகள் மற்றும் தீய ஆதிக்கங்களிலிருந்து பாதுகாப்பான். இன்ஷாஅல்லாஹ். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.